கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) இஸ்லாமிய கற்கை, வழிகாட்டல், வழிபாட்டு நிலையமொன்றினை நிறுவி அதனை முகாமை செய்தல் ;

(ஆ) அல்குர்ஆன் தஜ்வீத் மற்றும் மனன வகுப்புகளை நடாத்துதல் ;

(இ) ஆங்கிலம், சிங்களம், அரபு ஆகிய மொழி வகுப்புகளை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) பாடசாலை கல்வியை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு தொழில்துறைசார் கற்கை நெறிகளுக்காக ஊக்கமளித்தல், உதவிகள் செய்தல் ;

(உ) அநாதைகள், விதவைகளுக்கு இயலுமான நிதியுதவிகளை வழங்குதல் ;

(ஊ) தேசிய ரீதியாகவும், தனிநபர் ரீதியாகவும் மனித சமூகத்தின் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒத்தாசைகளை அதிகரித்தல் ;

(எ) நூலகங்களை நடாத்துதல், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள், பருவ வெளியீடுகள், ஒளி-ஒலி தட்டுகள் ஆகியவற்றிற்கு அனுசரணை வழங்குதல்

